

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2025) சென்னை ரிப்பன் கட்டடத்தில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் நாகர்கோவில் மாநகராட்சியில் ரூ.129.95 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள், தூத்துக்குடி மாநகராட்சியில் ரூ.120.53 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள், இராமேஸ்வரம் நகராட்சியில் ரூ.52.60 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற பாதாளச் சாக்கனத் திட்டப்பணிகள் என மொத்தம் ரூ.303.08 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 3 திட்டப்பணிகளைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.என். நேரு, மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், டாக்டர்.கனிமொழி சோமு, சசிகாந்த் செந்தில், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு. மகேஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.டி.ஜி.வினய், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாக இயக்குநர் எஸ். சிவராசு, , மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத்தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2025) ரிப்பன் கட்டடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகளில் பயின்று 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத்தொகை காசோலைகளை வழங்கினார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2025) பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தூய்மைப் பணியாளர்கள் 200 நபர்களுக்கு தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் உறுப்பினர் அடையாள அட்டைகளை வழங்கினார்.



துணை முதவனமல்கள் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2025) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் சென்னை பெருநகர மாநகராட்சி ரிப்பன் கட்டடத்தில் அமைக்கப்பட்ட நான்காண்டு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்டார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2025) ரிப்பன் கட்டடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகளில் பயின்று 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத்தொகை காசோலைகளை வழங்கினார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2025) பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 49 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்குவதன் அடையாளமாக 4 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

## இந்தியாவிலேயே அதிகமாக நகரமயமாகும் மாநிலமாக தமிழ்நாடு உருவாக,

# நம் முதலமைச்சர் செயல்படுத்திய திட்டங்கள்தான் காரணம்!

## சென்னை மாநகராட்சியில் திட்டப் பணிகள் தொடக்க விழாவில்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

***சென்னை,ஜூன்.13-***

***சென்னை மாநகராட்சியில் தமிழ்நாடு முழுவதும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.1,335.49 கோடி மதிப்பில் முடிவுற்ற பணிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி சிறப்புரையாற்றினார்.***

***அப்போது, அவர் திராவிட_மாடல் அரசு அமைந்தது முதல் கடந்த 4 ஆண்டுகளில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் செய்யப்பட்டுள்ள சாதனைகள் அடங்கிய புகைப்படக் கண்காட்சியைத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.***

***இந்த நிகழ்வின் போது, சென்னை மாநகராட்சி பள்ளிகளில் படித்து அதிக மதிப்பெண் எடுத்த மாணவ - மாணவியர், அவர்களுக்கு துணை நின்ற ஆசிரியர் பெருமக்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கியதோடு, அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் குடிநீர் வழங்கல் துறையில் பணிவாய்ப்பைப் பெற்ற 49 பேருக்கு பணி நியமன ஆணைகளையும் அவர் வழங்கினார்.***

***இதைத் தொடர்ந்து தூய்மைப் பணியாளர்கள் 200 பேருக்கு தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் உறுப்பினர்களுக்கான அடையாள அட்டையினையும் வழங்கினார்.***

***இதற்காக நடைபெற்ற விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:***

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பாக நடைபெறுகின்ற சிறப்பான நிகழ்ச்சியில் பங்கேற்று, உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். நம் அரசு கடந்த நான்கு ஆண்டுகளில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வளங்கள் துறையின் சார்பாக செய்துள்ள எண்ணற்ற சாதனைகள், பணிகள், திட்டங்கள் அடங்கிய புகைப்படக் கண்காட்சியை இங்கு நாம் திறந்து வைத்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, சென்னை மாநகராட்சி தொடங்கி, தமிழ்நாட்டின் கடைக்கோடியில் இருக்கின்ற பேரூராட்சிகள் வரை ஏராளமான திட்டங்களைத் தொடங்கி வைத்திருக்கிறோம். புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறோம்.

### எல்லார்க்கும் எல்லாம்

‘திராவிட மாடல்’ என்றாலே, ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்பது மட்டுமல்ல, ‘எல்லா ஊருக்கும் எல்லாம்’ என்பதற்கு சிறந்த உதாரணமாகத்தான் இன்றைக்கு இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு தமிழ்நாட்டில் நம் கழகம் ஆறு முறை ஆட்சி அமைத்திருக்கிறது என்றால், அதற்கு ஒரு தொடக்கப் புள்ளியாக இருந்தது, இந்த நகராட்சி நிர்வாகத் துறைதான்.

திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முறையாக, 1959-ஆம் ஆண்டு தேர்தலில், சென்னை மாநகராட்சியை வென்று, கைப்பற்றியது. அப்போது தீட்டப்பட்ட திட்டங்கள்தான், வளர்ச்சி பெற்ற இன்றைய சென்னைக்கு ஒரு விதையாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

### வளர்ச்சிக்கான திட்டங்கள்

கலைஞரின் ஆட்சிக் காலத்தில் சென்னை மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் நகர்ப்புற வளர்ச்சிக்கான திட்டங்கள், கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் எல்லாம் செயல்படுத்தப்பட்டன. நம் முதலமைச்சர் அவர்கள், அன்றைக்கு சென்னையின் மேயராக இருந்தபோது, ‘சிங்காரச் சென்னை’ என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

சென்னையைப் பார்த்துப் பார்த்து தீட்டினார். இன்றைக்கு சென்னையில் குடிநீர்ப் பஞ்சம் கிடையாது. சென்னை முழுவதும் எங்கு பார்த்தாலும் மேம்பாலங்கள் இருக்கின்றன. மெட்ரோ ரயில் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்தச் சாதனைகளுக்கு எல்லாம் 20 ஆண்டுகளுக்கு முன்பு அடித்தளம் அமைத்தவர், நம் முதலமைச்சர் அவர்கள் தான். அதுமட்டுமல்ல, உள்ளாட்சித் துறையின் அமைச்சராக இருந்தபோது, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக நம் முதலமைச்சர் அன்றைக்குச் செயல்படுத்திய திட்டங்கள்தான், இந்தியாவிலேயே அதிகமாக நகரமயமாகும் மாநிலமாக நம் தமிழ்நாடு உருவாகிறது என்றால், அதற்கு நம் முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது செயல்படுத்திய திட்டங்கள்தான் காரணம்.

### நகரமயமான மாநிலம்

கிட்டத்தட்ட 60 சதவிகிதம் அளவிற்கு நகரமயமான மாநிலம் என்றால், அது தமிழ்நாடு மட்டும்தான். மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டு பார்க்கும் பொழுது, மற்ற மாநிலங்களைப் பார்த்தீர்கள் என்றால், ஏதாவது ஒரு மாநகரம் மட்டும்தான் மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்திருக்கும். ஆனால், தமிழ்நாட்டில் மட்டும்தான், பரவலாக ஏராளமான மாநகரங்கள் இன்றைக்கு உருவாகி இருக்கின்றன. அதற்கு நம் முதலமைச்சர் அன்றைக்குத் தந்த திட்டங்கள்தான் காரணம்.

‘எந்த திட்டம் இல்லை’ என்று கேட்கும் அளவிற்கு ஒவ்வொரு ஊருக்கும் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். சென்னை மாநகராட்சிக்கு, என பல்வேறு புதிய பணிகளுக்கு இன்று நாம் அடிக்கல் நாட்டியிருக்கிறேன்.

குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், கடந்த பருவ மழை நேரத்தில் சென்னை மாநகரில் இருக்கின்ற நீர் வழிப் பாதைகளை எல்லாம் ஆய்வு செய்திருந்தேன்.

இந்த நீர் வழிப் பாதைகளை தூர்வாரும் வண்ணம் ரூபாய் 58 கோடி மதிப்பீட்டில், உள்ளகரம் கால்வாய், வீராங்கல் ஓடை, அம்பத்தூர் சிட்கோ கால்வாய் மற்றும் பாடி குப்பம் கால்வாய், கொடுங்கையூர் பிரதான கால்வாய், வியாசர்பாடி கால்வாய், காந்தி கால்வாய், ரயில்வே ஆன்ஸ்லி கால்வாய், மாம்பலம் கால்வாய், நந்தனம் கால்வாய், அடையாறு சிட்கோ கால்வாய், ரெட்டி குப்பம் கால்வாய், செல்லம்மாள் கால்வாய், ராஜ்பவன் கால்வாய், ஆலந்தூர் மற்றும் அடையாறு மண்டலங்களில் உள்ள வீராங்கல் ஓடை ஆகியவற்றை மேம்படுத்தும் பணியையும் இன்று தொடங்கி வைத்திருக்கிறேன். அதுமட்டுமல்ல, சாலைப் பணிகளையும் தொடங்கி வைத்திருக்கிறோம். முக்கியமாக, சென்னை மட்டுமின்றி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, ராமநாதபுரம் ஆகிய இடங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், பாதாளச் சாக்கடைத் திட்டங்களையும் இன்று தொடங்கி வைத்திருக்கிறோம்.

### பொது மக்களின் பொறுப்பு

மக்களின் வாழ்வாதாரம் உயர வேண்டும் என்ற நோக்கில்தான், முதலமைச்சர் அவர்கள் இப்படி பல்வேறு திட்டங்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள். பொதுமக்களுக்குத் தேவையான அத்தனை வசதிகளையும் நமது அரசு செய்து தர தயாராக இருக்கிறது. அதனை பயன்படுத்திகொள்வது மட்டுமல்ல, பேணி பாதுகாப்பதும் பொது மக்களின் பொறுப்பு என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் படித்து பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்கள், மாணவிகள் வந்திருக்கிறீர்கள். உங்களுக்கும் உங்கள் வெற்றிக்குத் துணை நின்ற அனைத்து ஆசிரியர் பெருமக்களுக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்கு கல்வி ஊக்கத்தொகை கொடுப்பதில், நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

உயர்கல்வியிலும் நீங்கள் சாதனை படைக்க எங்களின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களின் உயர்கல்விக்கு வழிகாட்ட, இந்த அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறது. தமிழ் புதல்வன் திட்டம், உங்களின் உயர்கல்விக்கு வழிகாட்ட நான் முதல்வன் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செய்து கொடுத்திருக்கிறார்.

இவை தவிர, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 49 பேருக்கு இங்கு பணி நியமன ஆணைகளை தர இருக்கிறோம். அவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களின் அரசு பணி சிறக்கட்டும்.

இந்த சிறப்பான வாய்ப்பை அளித்த அமைச்சர் நேரு அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியை தெரிவித்து, உங்களின் பணிகளுக்கெல்லாம் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர் பாபு, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், தமிழச்சி தங்கபாண்டியன், மருத்துவர் கனிமொழி என்.வி.என்.சோமு, சசிகாந்த் செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வழக்கறிஞர் பரந்தாமன், ஜெ.கருணாநிதி, மருத்துவர் எழிலன், வெற்றியழகன், பிரபாகர்ராஜா, காரப்பாக்கம் கணபதி, ஜோசப் சாமுவேல், அசன் மௌலானா, சென்னை மாநகராட்சித் துணை மேயர் மகேஷ்குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் முதன்மைச் செயலாளர் முனைவர் கார்த்திகேயன் ஐ.ஏ.எஸ்., சென்னை மாநகர ஆணையர் குமரகுருபரன் ஐ.ஏ.எஸ்., டுவாரட் போர்டின் மேலாண்மை இயக்குநர் கிரண்குமார் ஐ.ஏ.எஸ்., சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தின் மேலாண்மை இயக்குனர் வினய் ஐ.ஏ.எஸ்., டி.எம்.ஏ.சிவராஜ் ஐ.ஏ.எஸ், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ராமலிங்கம், சிற்றரசு உள்ளிட்ட நிலைக்குழு உறுப்பினர்கள் அரசு அதிகாரிகள் அலுவலர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.